கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (யூன் 2019)

# HCS 4123 Hinduism in South India

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி–II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – I

01. பண்டைத் தமிழகத்தில் வைதீக சமய மரபுகள் பெற்றிருந்த செல்வாக்கினை மேல்வரும் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
    - (i) சமய நெறிகள் (07 புள்ளிகள்)
    - (ii) சமயக் கிரியைகளும் அந்தணர்களும் (07 புள்ளிகள்)

02. தென்னிந்தியாவில் மேல்வரும் சமய மரபுகள் பெற்றிருந்த செல்வாக்கினை பரிசீலனை செய்க.
    - (i) பாசுபத சைவம் (07 புள்ளிகள்)
    - (ii) காபாலீக சைவம் (07 புள்ளிகள்)

03. "விஜயநகர நாயக்கர் காலத் தமிழகத்தில் முருக வழிபாடு மீளெழுச்சி கண்டது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.
    - (i) முருக அடியார்கள் (07 புள்ளிகள்)
    - (ii) பிரபந்தங்கள் (07 புள்ளிகள்)

## பகுதி – II

04. கேரளத்தில் வழக்கிலுள்ள இந்துக் கலாசாரம் சார்ந்து பிரதிபலிக்கும் அம்சங்களை மதிப்பீடு செய்க.
    (24 புள்ளிகள்)

05. "பல்லவர் காலப் பக்தி இயக்கத்தின் எழுச்சியில் சைவ நாயன்மார்கள் கையாண்ட உத்திகள் பெரும் பங்காற்றியுள்ளன எனலாம்" இக்கூற்றினை தகுந்த ஆதாரங்களுடன் விபரிக்குக.
    (24 புள்ளிகள்)

06. சோழப் பெருமன்னர் காலச் சைவ சமய மரபில் பெரியபுராணம் ஏற்படுத்திய செல்வாக்கினை பரிசீலனை செய்க.
    (24 புள்ளிகள்)

07. தமிழ் நாட்டில் "விநாயகர் வழிபாட்டின் தோற்றமும் இதன் வளர்ச்சிப் போக்குகளும" எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று வரைக.
    (24 புள்ளிகள்)

*****